COMITE DE COORDINATION TAMOUL - FRANCE
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு-பிரான்ஸ்
TAMIL CO-ORDINATING COMMITTEE - FRANCE

www.tamilarangam.net

# கிளாலி நோக்கிய ஆக்கிரமிப்பு யுத்தம்

பாரிஸ்
30. 09. 93

கடந்த சில மாதங்களாக எதிர்பார்க்கப்பட்டுவந்த சிறிலங்கா அரச படையினரின் இராணுவ நடவடிக்கை ஆனையிறவில் வடக்கு நோக்கிய தரைமார்க்க நகர்வாக வெடித்துள்ளது. இருபத்திஎட்டாம் திகதி காலை ஆரம்பிக்கப்பட்ட இவ் இராணுவ நடவடிக்கை மூன்றாவது நாளாகத் தொடர்கின்றது.

டி. பி. விஜயதுங்கா ஜனாதிபதியாக பதவி ஏற்றதன்பின் மேற்கொள்ளப்பட்டுள்ள மிகப் பெரியளவிலான இராணுவ நடவடிக்கையாக இது கருதப்படுகின்றது. விமானப்படை, கடற்படையின் உதவியுடன் அதிகளவிலான தாங்கிகள் கவசவாகனங்கள் சகிதம் பல ஆயிரக்கணக்கான படையினர் ஈடுபட்டுள்ள "யாழ்தேவி" என்ற குறியீட்டுப் பெயருடனான இந்த இராணுவ நடவடிக்கை சிறிலங்காவின் அரசியல் குறிக்கோளை எளிதாக அடையும் இலக்குடன் மேற்கொள்ளப்படுவதாக தெரியவருகின்றது.

கிளாலிக் கடலேரிப் பகுதியை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து தமிழீழத்தின் குரல்வளையை நெரிப்பதாகவே இந் நடவடிக்கை திட்டமிடப்பட்டுள்ளது. கிளாலியைக் கைப்பற்றுவதன் மூலம் குடாநாடு ஏனைய பகுதிகளுடன் கொண்டிருந்த தொடர்பை முற்றாகத் துண்டித்துவிடலாம் என சிறீலங்கா அரசு நம்புகின்றது.

யாழ் குடாவைக் கைப்பற்றுதல் அல்லது அதன் முதற்கட்டமாக குடாநாட்டு மக்களின் ஒரே போக்குவரத்துப் பாதையாக இருக்கின்ற கிளாலிக் கடலேரியை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருதல்; இதன்மூலம் குடாநாட்டு மக்களை சகல வழிகளாலும் நசுக்குதல்; அடிபணிய வைத்தல் என்பதே "யாழ்தேவி" இராணுவ நடவடிக்கையின் நோக்கமாகக் கொள்ளப்படுகின்றது. இதற்கென பெருந்தொகைப் படையினர் களத்தில் இறக்கப்பட்டுள்ளனர்.

"இனப்பிரச்சினையே இந்நாட்டில் இல்லை" என அண்மைக் காலமாக சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா கூறிவரும் விசக்கருத்தின் செயல் உருவமாகவே இவ் இராணுவ நடவடிக்கை நோக்கப்படுகின்றது. இனப்பிரச்சினையே இல்லை என்ற சிங்கள இனவாதத்தின் கருத்தை நடைமுறைப்படுத்துவதாயின் முதலில் விடுதலைப் புலிகளை அழிக்கவேண்டும்; குறைந்தபட்சம் அவர்களின் எதிர்க்கும் சக்தியையாவது இல்லாதொழிக்கவேண்டும். சுதந்திர அவாவோடு வீறுகொண்டிருக்கும் தமிழ் மக்களை பட்டினிபோட்டு, அத்தியாவசிய தேவைகளை மறுத்து அவர்களைத் தமது வழிக்குக் கொண்டுவரவேண்டும். இவற்றைச் செயற்படுத்துவதன்மூலம் தமிழர்களின் தேசிய சுதந்திர அவாவை இருந்தஇடம் தெரியாமல் செய்வதோடு, தமிழ் மக்களை நிரந்தர அடிமைகளாக ஆக்கிவிடலாம் எனவும் விஜயதுங்கா அரசு கருதுகின்றது. இதன் முதற்படியே கிளாலியைக் கைப்பற்றுவதற்கான இராணுவ நடவடிக்கை எனலாம்.

## ஆனால் நடப்பது என்ன?

இருபத்தி எட்டாம் திகதி அட்டகாசமாக ஆரம்பிக்கப்பட்ட "யாழ்தேவி" இராணுவ நடவடிக்கை எடுத்த எடுப்பிலேயே சிறிலங்கா தரப்பில் பலத்த சேதத்தை உண்டுபண்ணியுள்ளது. மூன்று நாட்களில் மாத்திரம் தொண்ணூற்றி ஆறு படையினர் இறந்து, நூற்றி நாற்பது பேர் காயமடைந்துள்ளனர் என சிறிலங்கா இராணுவ தரப்பில் தெரிவிக்கப்படு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கின்றது. ஆனால் உண்மையில் அதனிலும் அதிக படையினரை மூன்று நாள் யுத்தத்தில் சிறீலங்கா அரசு இழந்துள்ளது. நான்கு கவசவாகனங்கள் அழிக்கப்பட்டு, ஏராளமான ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

www.tamilarangam.net

## விடுதலைப் புலிகளின் வீராவேசத் தாக்குதல்

விமானங்களின் குண்டு மழைக்குள் நின்று விடுதலைப் புலிகள் வீராவேசமாகப் போரிட்டுவருகின்றனர். பல முனைகளில் இராணுவத்தினரின் நகர்வு விடுதலைப் புலிகளின் தாக்குதல்களால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. நடந்த முதல் மூன்று நாள் பாரிய யுத்தத்தில் ஐம்பது விடுதலைப் புலிகள் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டுள்ளனர். சிறீலங்கா இராணுவத்தினரின் தயார்ப்படுத்தலை முன்னரே அறிந்து, தாக்குதலை எதிர்பார்த்துக் காத்திருந்த விடுதலைப் புலிகளிடம் சிறிலங்காப் படை மிகப் பலமான எதிர்ப்பையே நோக்கவேண்டியுள்ளது.

## ஆத்திரத்தின் வெளிப்பாடு

விடுதலைப் புலிகளிடம் மூன்று தினங்களாகச் சந்தித்துவரும் இழப்புக்களால் கொதிப்புற்றுள்ள சிறிலங்காப் படை பொதுமக்கள் மீது குண்டுகளை வீசியும், உலங்கு வானூர்திகளில் இருந்து கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகங்களையும் மேற்கொண்டுள்ளது. முகாங்களில் இருந்தும், கடற்படைப் பீரங்கிப்படகுகளில் இருந்தும் தொடர்ச்சியான தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது. சிறீலங்கா அரசபடையினரின் வெறிபிடித்த தாக்குதல்களினால், மூன்று நாட்களில் மாத்திரம் குடாநாட்டில் அறுபதுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். நூற்றுக் கணக்கான பொதுமக்கள் காயமடைந்துள்ளனர். சிறீலங்காப் பயங்கரவாதப் படை, சர்வதேச யுத்த விதிகளுக்கு முரணாக "கிளாஸ்ரர்" குண்டுகளை மக்கள்மீது வீசிவருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்தை, எத்தகு பயங்கரவாதத்தை மேற்கொண்டாவது அழித்துவிட சிறிலங்காப் பயங்கரவாத ஆட்சியாளர்கள் தொடர்ந்து முயற்சித்தவண்ணமே உள்ளனர்.

"போர் என்றால் போர்" என்று கொக்கரித்த ஜெயவர்த்தனா காலத்திலிருந்து, டி. பி. விஜயதுங்கா காலம் வரை தமிழ் மக்களின் விடுதலை உணர்வையும், அவர்களின் பாதுகாப்புச் சின்னமாக விளங்கும் விடுதலைப் புலிகளையும் இனவாதிகளால் அழிக்கவோ அடக்கவோ முடியவில்லை; மாறாக தமது தூரநோக்கற்ற பயங்கரவாத நடவடிக்கைகளால் வளர்க்கவே உதவியிருக்கின்றனர். சிறிலங்காவில் எந்தத் தலைவர்கள் ஆட்சிக்கு வந்தாலும், தமது வல்லமைக்கு அப்பாற்பட்டு எத்தகைய இராணுவ நடவடிக்கையைத் தமிழ் மக்கள்மீது திணித்தாலும் தமிழ் மக்களின் விடுதலை உணர்வையோ, விடுதலைப் புலிகளையோ அழித்துவிடவோ அடக்கிவிடவோ முடியாது. சிறிலங்காவின் தமிழினத்திற்கெதிரான ஒவ்வொரு நகர்வும் தமிழ் மக்களினதும் விடுதலைப் புலிகளினதும் வீரமும் தியாகமும் மிக்க உறுதியான சளைக்காத போராட்டத்தினால் தகர்க்கப்படும் என்பதே வரலாறு உணர்த்தவிருக்கும் பாடமாகும். இதனை சிறிலங்கா உணருமா?